RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2516

OPEN ACCESS

# தொல்காப்பியத்தில் பிரிவின் நிலைமறுப்புக் கோட்பாடு

**த. விஜயலட்சுமி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். இராமசாமி ஞாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# The Theory of Denial of the Status of Division in Tolkappiyam

**T. Vijayalakshmi** [a, *]

[a] Department of Tamil, Sri S.R.N.M College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: tamilviji229@gmail.com

Received: 23-11-2024
Revised: 09-01-2025
Accepted: 19-01-2025
Published: 26-01-2025

Check for updates

**ABSTRACT**

Dialectics is one of the theories under study. It is the philosophy of dialectics to argue for the movement of all beings and things in the world. Dialectics has a long history in the history of philosophy. Marxist dialectics is the most indispensable of them. Marxist dialectics is divided into materialism and idealism. Its theories are the paradox, the negation of the status quo, and the change of quantity and the change of quality. Based on the concept of negation of eternity, this article focuses on the concept of separation in Tholkappiar's work.

**Keywords:** Dialectics, Tolkappiyam, Marxist Dialectics, Tamil History

## முன்னுரை

ஆய்வுக்கு உட்படுத்தப்பெறும் கோட்பாடுகளுள் ஒன்றாக இயங்கியல் அமைகின்றது. உலக உயிர்கள் மற்றும் பொருட்கள் அனைத்தின் இயக்கம் குறித்து வாதிடுவது இயங்கியலின் தத்துவமாகும். தத்துவ வரலாற்றில் நீண்ட நெடிய வரலாற்றினை உடையது இயங்கியல். அவற்றுள் நீங்காத இடம்பெறுவது மார்க்சிய இயங்கியலாகும். பொருள்முதல் வாதம், கருத்துமுதல் வாதமென மார்க்சிய இயங்கியல் இருபிரிவாக சுட்டப்பெறுகிறது. திணை முரண்பாடு, நிலைமறுப்பின் நிலைமறுப்பு, அளவு மாற்றமே பண்ப் மாற்றம் என்பவை அதன் கோட்பாடுகளாகும். நிலைமறுப்பின் நிலைமறுப்பெனும் கோட்பாட்டின் அடிப்படையில் தொல்காப்பியரின் படைப்பில் காணப்பெறும் பிரிவு பற்றிய கருத்து நிலைமறுப்பினை மையமாகக் கொண்டு இக்கட்டுரை நீள்கின்றது.

## நிலைமறுப்பின் நிலைமறுப்புக் கோட்பாடு விளக்கம்

சிந்தனையின் வளர்ச்சி நிலையே இயக்கமாகும். எந்தவொரு கருத்தும் சிந்தனையின் வாயிலாக அடுத்தகட்ட வளர்ச்சிக்கு எடுத்துச் செல்லப்பெறுகிறது. ஒரு கருத்தானது காலத்திற்கு ஏற்ப பல்வேறு வகையான நிலைகளில் மாற்றம் காணுகிறது. கருத்துக்கள் மாற்றம் அடையக் கூடியவை, நிலையானவை அன்று என்பதே 'நிலைமறுப்பின் நிலைமறுப்பு' என்னும் கோட்பாடு ஆகும். "மொக்கு மறுக்கப்பட்டு பூவும் பூவை மறுத்துக் காயும் உருவாவதை நிலைமறுப்பின் நிலைமறுப்புக்குச் சான்றாகக் குறிப்பிடலாம்[1]" எனத் துரை கூறுகிறார். பழையன கழிதலும் புதியன புகுதலுமான விதி இயங்கிக் கொண்டிருப்பதையே நிலை மறுப்பின் நிலைமறுப்பு என்பர். ஒவ்வொரு இயக்கமும்

நிகழ்வுகளின் அடிப்படையில் மாறும் என்பதை அறியலாம். நிலை மறுப்பு இயல்பானது என்பதையும் மார்க்சியக் கருத்தினால் அறியமுடிகின்றது.

## பிரிவின் நிலைமறுப்பு

தொல்காப்பியர் அகத்திணை மற்றும் புறத்திணையியலில் பிரிவின் நிகழ்வுகளைக் குறிப்பிடுகின்றார். ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக மனிதன் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பெயர்ந்து செல்லுதலே பிரிவு எனப்படும். தொல்காப்பியர் அது ஓதல், பகை, தூது காரணமாக நிகழுமென்று மூன்று வகைப்படுத்துகிறார்.

"ஓதல் பகையே தூதிவைப் பிரிவே" (தொல்.அகம்:26)

சிறப்பினையுடைய முல்லை முதலாக நெய்தல் ஈறாகச் சொல்லப்பெற்ற முறைமையுடைய நானிலத்தும் மக்களிடையே உண்டான சீர்கேட்டைத் திருத்திப் பின்னர் சீர்கெடாமற் காத்தற்கான நாடு காவல் செய்வதற்கும் பொருளினைத் தேடிச் செல்வதற்கும் பிரிவு ஏற்படும் என்கிறார். காவற்பிரிவையும் பொருட்பிரிவையும் பிரிவு வகையாக இங்குச் சுட்டுகிறார்.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய

முல்லை முதலாகச் சொல்லிய முறையால்

பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்

இழைத்த வொண்பொருள் முடியவும் பிரிவே" (தொல்.அகம்:28)

ஓதல், பகை, தூது என்னும் பிரிவினைச் சுட்டும் நிலையிலிருந்து தொல்காப்பியர் மாறுபட்டு காவல் மற்றும் பொருள் பிரிவினையும் பிரிவுகளின் வகைகளென்று உரைக்கும் நிலைக்கு வருவதை அறியமுடிகிறது.

காவற்பிரிவும், பொருட்பிரிவும் மன்னருக்கு உரியதாக மேற்சொன்ன தொல்காப்பியர் அக்கருத்து நிலையில் மாறுபட்டு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வர்க்கும் உரியதென உரைக்கின்றதைக் காணமுடிகிறது.

"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" (தொல்.அகம்:29)

நால்வர்க்கும் காவற்பிரிவும், பொருள்வயின் பிரிவும் உரியதெனினும் காவற்பிரிவில் அரசரது சார்பாளராகத் தலைமை தாங்கிச் செல்லுதற்கும், திறைப் பொருளினைத் திரட்டவும், அரசர்க்கு ஈடாகச் செல்லுவதற்கும் உரியவர்கள் வேளாளரும், வணிகரும் ஆவர் என்கிறார் தொல்காப்பியர்.

"மன்னர் பாங்கின் பின்னோ ராகுப" (தொல்.அகம்:30)

"வேந்துவினை இயற்கை வேந்தனி னொரீஇய

ஏனோர் மருங்கினும் எய்திட னுடைத்தே" (தொல். அகம்:31)

காவல் மற்றும் பொருட்பிரிவில் அரசருடன் மிகுதியாக இடம் பெறுபர்கள் வேளாளரும், வணிகரும் மட்டுமென்ற நிலைமறுப்பின் கருத்து உருவாவதை இங்கு காணலாம்.

பொருள் ஈட்டுவதன் காரணமாக அயல்நாடுகளுக்குப் பிரிந்து செல்லுதல் வணிகர் மற்றும் வேளாளருக்கு உரியதாகும். அந்நிலையில் கடல் கடந்து செல்லும் பிரிவில் பெண்களை உடன் அழைத்துச் செல்வதில்லை என்னும் நிலைமறுப்பின் கருத்து எடுத்துரைக்கப் பெறுகிறது. இதனை,

"பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே" (தொல்.அகம்:35)

"முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை" (தொல்.அகம்:37)

என்னும் நூற்பாக்கள் சுட்டுகின்றன.

வீட்டை விட்டு அப்பால் சென்று விட்டால், அவர் அயலவர் ஆவார். எனவே, ஊரும், நகரும். காடும் தாண்டிப் போவது மட்டுமன்று வீட்டை விட்டு வெளியேறி விட்டாலே அதுவும் பிரிவென்று கொள்ளப்பெறும் என்கிறார் கொல்காப்பியர்.

"அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே" (தொல்.அகம்:41)

இங்கு தொல்காப்பியர் பிரிவு பற்றிய புதிய நிலைமறுப்புக் கொள்கையினை முன்வைக்கிறார்.

## முடிவுரை

பிரிவானது ஓதல், பகை, தூது காரணமாக நிகழுமென்ற நிலையிலிருந்து பொருள் மற்றும் காவல் பொருட்டும் நிகழுமென்ற நிலை உருவாகிறது. பொருள், காவல் பிரிவு அரசனுக்கு மட்டும் என்ற நிலை மறுக்கப்பெற்று அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வர்க்கும் உரியதென்றும் உரைக்கப்பெறுகிறது. அப்பிரிவுகளில் அரசனுடன் மிகுதியாக இடம்பெறுபவர்கள் வேளாளர், வணிகரென்ற கருத்தையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். பொருட்பிரிவின் காரணமாக அயல்நாடுகளுக்குச் செல்பவர்கள் வணிகர்களே ஆவர். அப்பிரிவில் மகளிரை உடன் அழைத்துச் செல்லுவதில்லை என்ற நிலைக்கருத்தும் முன்வைக்கப்படுகிறது. பிரிவின் அடுத்தகட்டமாக வீட்டைத் தாண்டினால் அதனையும் பிரிவென்று தொல்காப்பியர் கருதும் நிலையினைக் காணலாம். இவ்வாறு தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் பிரிவு என்னும் கருத்தின் நிலைமறுப்பு நீட்சியினைச் சுட்டிச் சென்றுள்ளார்.

## References

க. நெடுஞ்செழியன், தமிழர் இயங்கியல்.

க. வெள்ளைவாரணர் (உ.ஆ), தொல்காப்பியம்.

சு. துரை, மார்க்சிய நோக்கு: தமிழக்கிய ஆய்வுகளில், ப.5

தேவசிகாமணி, இலக்கிய இஸங்கள்.

ந. முத்துமோகன், மார்க்சியக் கட்டுரைகள்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License